2456

**சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ஆணை**

நிறப்பிப்பவர்: முனைவர்.இரா.முருகன், எம்.எஸ்.சி.,பி.எட்.,எம்.பில்.,பி.எச்.டி.,

ந.க.எண்.013163/ஆ2/2022 நாள். [illegible].09.2022

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்வி அமைச்சுப்பணி – பணிவரன்முறை – சேலம் மாவட்டம், ஆத்தூர் கல்வி மாவட்டம், நெய்யமலை, அரசு உயர்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் மா.ரா.பாலாஜி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.101 பள்ளிக் கல்வித் (வரவு செலவு–1) துறை நாள்.18.05.2018.
2. சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.8789/ஆ2/2020, நாள்.18.09.2020.
3. ஆத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.2328/அ1/2022, நாள்.08.07.2022.

---

2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (GROUP IV SERVICES) தற்காலிக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மா.ரா.பாலாஜி என்பாருக்கு பார்வை 2 இல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளதன்படி, தனியர் சேலம் மாவட்டம், நெய்யமலை, அரசு உயர்நிலைப்பள்ளியில் 21.09.2020 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றார்.

தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்கண்டுள்ள பணியாளரின் பணியினை வரன்முறைப்படுத்தக் கோரும் கருத்துருக்கள், பார்வை 3 இல் காணும் ஆத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் பரிந்துரை கடிதத்துடன் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காண் படிவத்தில் அன்னாரது பெயருக்கெதிரில் கலம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தனியர் இளநிலை உதவியாளர் பணியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தகுதிகாண் பருவ காலத்திற்குள் இளநிலை உதவியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்கப்பட வேண்டும்.

| வ.எண். | பணியாளர் பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளி/அலுவலகம் திரு/திருமதி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | மா.ரா.பாலாஜி, இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, நெய்யமலை, சேலம் மாவட்டம். | 21.09.2020 முற்பகல் | 21.09.2020 முற்பகல் |

20.6.2023

20/6/2023
தலைமை ஆசிரியர் I/C
அரசு உயர்நிலைப்பள்ளி,
நெய்யமலை, பெ.நா.பாளையம் (வட்டம்)
சேலம் (மா) பின் - 636114

இந்தப் பணிவரன்முறையானது சென்னை/சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளில் தொகுதி IV– இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டதாகும்.

பணிவரன்முறை குறித்த பதிவுகள் சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும். தனியரின் பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றுகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் உடன் அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**இணைப்பு.**
1. அசல் பணிப்பதிவேடு –1 தொகுப்பு.
2. இடைநிலை வகுப்பு மதிப்பெண் சான்று அசல் –1.
3. மேல்நிலை வகுப்பு மதிப்பெண் சான்று அசல் –1.
4. இடைநிலை மற்றும் மேல்நிலை வகுப்பு மதிப்பெண் சான்றுகள் உண்மைத்தன்மை அசல் –2.
5. பணிநியமன ஆணை அசல் –1.

(முதன்மைக் கல்வி அலுவலர்),
சேலம்.

பெறுநர்.
சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல்.
1. தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, நெய்யமலை,சேலம் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர், ஆத்தூர்.